**கவனிக்க.-** *2009.03.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) என்பன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1594 - 2009 මාර්තු 20 වැනි සිකුරාදා - 2009.03.20

*1594 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 332 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 332 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, மாச்சு மாதம் 27 ஆந் திகதி பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மாச்சு மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகள் – காலி மாவட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.12.26 ஆந் திகதிய 1582 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 2009.04.17 என மாற்றப்பட்டுள்ளது :-*

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | ஹபராதூவ | துல்பே பத்துவ பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் உனவதுன பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், காலி |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

3-453

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**போக்குவரத்து அமைச்சு**

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II பிரிவு 'ஆ' வைச் சேர்ந்த மோட்டார் வாகன பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008 (2009)**

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II 'ஆ' பிரிவிற்கு மோட்டார் வாகன பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2009, யூன் மாதத்தில் கொழும்பில் மட்டும் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதி காலக்கிரமத்தில் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும். இப்பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

**நேர்முகப் பரீட்சை** .- எழுத்துமூலப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக் குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுள், மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் போதுமானதென நிச்சயிக்கப்படுகின்ற உயர் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகள் தொடர்பில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

01. இப்பதவிக்கு நியமிக்கப்படுவோரின் எண்ணிக்கை, நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

**2. கட்டமைப்பும் மாதாந்த சம்பள அளவுத் திட்டமும் :-**

*விசேட வகுப்பு : ரூபா 20,760 - 365 × 9 - 500 × 18 - ரூபா 33,045.*
*வகுப்பு I : ரூபா 18,490 - 5 × 240 - 14 × 320 - ரூபா 24,170.*
*வகுப்பு II பிரிவு 'அ' : ரூபா 16,450 - 180 × 11 - ரூபா 18,430.*
*வகுப்பு II பிரிவு 'ஆ' : ரூபா 14,570 - 10 × 170 - ரூபா 16,270.*

(ரூ. 14,910 சம்பள நிலைக்கு வருவதற்கு முன்பதாக, முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். II'அ' வகுப்பிற்கு பதவியுயர்வு பெறுவதற்கு, II'ஆ' வகுப்பில் 6 வருட சேவைக்காலம் பூர்த்தியடைவதற்கு முன்பதாக முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது, இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II பிரிவு 'ஆ' வைச் சேர்ந்த மோட்டார் வாகன பரிசோதகர் பதவிகளுக்காகவாகும்.

3. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தபுதாரர்/விதவை, அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

4. **தகைமை** .-சகல விண்ணப்பதாரர்களும்,

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;
(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:-

(i) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மூலம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா ;

அல்லது

(iii) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற எந்திரவியல் பரீட்சையின் முதலாம் பகுதி சித்தியெய்திய சான்றிதழ் ;

அல்லது

(vi) மேலுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக் கொள்ளக்கூடியதென்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிற தகைமையைக் கொண்டிருத்தல்.

6. **தொழில்சார் அறிவும் அனுபவமும்**.- (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமையினைக் கொண்டதன் பின்னர், அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் / நியதிச் சட்ட சபையொன்றில் அல்லது கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, குறைந்த பட்சம் 10 ஊழியர்கள் சார்பில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் அங்கத்துவப் பணம் செலுத்தும் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகன கராஜ் ஒன்றில், உரிய துறையின் கீழ் குறைந்த பட்சம் இரண்டு வருட மேற்பார்வை மட்டத்திலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

அத்துடன்

(ii) சகல விதமான மோட்டார் கோச் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இப்பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும், பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

8. இப்பதவிக்கான நியமனம் பெறுவோர், தாங்கள் தீவின் எப்பகுதியிலேனும் பணியாற்றுவதற்கான தேக ஆரோக்கியத்தை உடையவரா? இல்லையா? என்பதை பரிசோதிக்கும் வகையில், அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரினால் நடாத்தப்படுகின்ற மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

9. நியமனம் பெறும் அனைத்து உத்தியோகத்தர்களும், தாங்கள் சேவையில் இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக, அதற்கடுத்த அரச கரும மொழியில் தேர்ச்சியை, சேவையில் இணைந்த 5 வருட காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. **பரீட்சை நடைமுறை**.-ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும். அது தொடர்பான விபரங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ளது:-

(i) மோட்டார் எந்தரவியல் தொடர்பான பொது அறிவு - (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(இவ் வினாத்தாள் பல்தேர்வு மற்றும் ஓரளவு கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக இருக்கும்).

கீழ்க்காட்டப்பட்டுள்ள தொழில்நுட்பத்துறைகள் தொடர்பில் அடிப்படை அறிவும், இத்துறையில் உள்ள கோளாறுகள் தொடர்பில் அடிப்படை விளக்கமும் விண்ணப்பதாரிகளிடத்தில் காணப்படுதல் வேண்டும்:-

(1) டீசல் மற்றும் பெற்றோல் எஞ்சின்களின் செயற்பாடும், வலு உள்ளீடும்

(2) கிளச்சு மற்றும் செலுத்தீடு முறைமை

(3) மசகிடும் முறைமையும் குளிராக்கும் முறைமையும்

(4) மின்சார முறைமை

(5) பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களின் எரிபொருள் முறைமை

(6) கால் பிரேக் முறைமை, சக்கரங்களின் இயக்கத் திறனைப் பரீட்சிக்கும் உபகரணங்களைப் பரிசோதனை செய்தல், எதிர்விளைவு செயலாற்றல் காலம், நிறுத்தும் தூரம்

(7) கைபிரேக் முறைமை

(8) சக்கர ஒழுங்குபடுத்தலையும் ஸ்ரியரின் அமைப்பியலையும் பரீட்சிக்கும் உபகரணம்

(9) தொங்கல் முறைமை

(10) மோட்டார் வாகனமொன்றிற்கான தகுநிலை அறிக்கையொன்றைத் தயாரித்தல்

(11) மோட்டார் வாகனமொன்றிற்கு தகுதிச் சான்றிதழொன்றைத் தயாரித்தல்

(12) திணைக்களத்தின் பணிகள் மற்றும் மோட்டார் வாகன பரிசோதகரொருவருக்குரிய கடமைகள் தொடர்பான பொது அறிவு

(13) சாயமிடுதல், ஒட்டுதல், பொருத்துதல் தொடர்பான பொது அறிவு

(14) தன்னியக்க செலுத்தீடு.

(ii) பொது விவேக (நுண்ணறிவு) பரீட்சை- (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

(விண்ணப்பதாரிகளின் மொழி, எண்ணியல் நிபுணத்துவம், தர்க்க ரீதியான ஆற்றல் ஆகிய துறைகள் உள்ளிட்டதாக, பரீட்சார்த்திகளின் ஆற்றலை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாத்தாள்).

**குறிப்பு**:- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, இவ்வறிவித்தலின் பந்தி 5 இல் (i தொடக்கம் vi வரை) காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, பரீட்சைக்கு அவர்கள் தோற்றிய மொழியிலேயே, அதாவது, சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், தகுதி பெறுவதற்கான பரீட்சைக்கு, தமிழ்மொழி மூலம் அல்லது ஆங்கில மொழி மூலம் தோற்றி சித்தியடைந்த பரீட்சார்த்திக்கு அல்லது தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் கல்வி கற்ற பரீட்சார்த்திக்கு தான் விரும்பியவாறு இப்பரீட்சையின்போது சிங்கள மொழி மூலம் விடை அளிக்க முடியும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதை கவனிக்கவும்.

(ii) பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். இருந்த போதிலும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறுவதானது, பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பொருள்படமாட்டாது.

*11.* **விண்ணப்பிக்கும் முறை**.- (i) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள், அவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தமது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன், உரிய தகவல்கள் தத்தமது கையெழுத்தினால் தெளிவாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தலும் வேண்டும். தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவத்தில், சிங்களத்திற்கு மேலதிகமாக, ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக, ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதுடன், தமக்குத் தொடர்பில்லாத பிரிவுகள் இருப்பின் அவற்றிற்கு "ஏற்புடையதாகாது" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் இடைவெளிகளை வைப்பதால், அவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு என்பதை ஆழமாக மனதிற் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவுறாத விண்ணப்பங்களும், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித முன் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தாங்கள் விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன் வசம் வைத்திருப்பது விண்ணப்பதாரிகளுக்கு பயனுள்ளதாக அமையும். மேலும், பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா? என்பது தொடர்பில் விண்ணப்பதாரி விழிப்பாக இருப்பது முக்கியமானது என்பதையும், அவ்வாறில்லாத வீண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

(இல. 01.1 தொடக்கம் 1.11 வரை பக்கம் 1 இலும், இல. 02 தொடக்கம் 03 வரை பக்கம் 2 இலும், இல. 04 தொடக்கம் 07 வரை பக்கம் 3 இலும் இருக்குமாறு ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தமது விண்ணப்பப் படிவங்களை தயாரித்துக் கொள்ளவும்).

(ii) சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட தத்தமது விண்ணப்பப் படிவங்களை, 2009, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 இலக்கமுடைய வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கக்கூடியவாறு, எந்தவொரு மாவட்டச் செயலகத்திற்கும்/பிரதேச செயலகத்திற்கும் ரூ.350 ஐ பரீட்சைக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை, விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் வேறாகாதவாறு ஒட்டி இணைத்து அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருப்பது சாலச் சிறந்ததாகும். பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. அத்துடன், வேறொரு பரீட்சை சார்பில் மாற்றவும் முடியாது.

(iv) அரச திணைக்களங்கள்/அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்ட சபைகள் முதலான அரச நிறுவனங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள், தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக அல்லது நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும். தமது விண்ணப்பங்களை 2009, ஏப்பிறல் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கப்பெறச் செய்யுமாறு கோரும் கடிதமொன்றையும் சேர்த்து, தத்தமது விண்ணப்பங்களை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறும் விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அல்லது அத்திணைக்களத்தின் பிரிதொரு உத்தியோகத்தரின் தனிப்பட்ட பெயருக்கு விண்ணப்பங்களை அனுப்பக்கூடாது. திணைக்களங்களூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களாயினும், உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் பட்சத்தில் அவை நிராகரிக்கப்படும். தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதி செய்யும் வகையில், திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின் கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும் இடப்படாதிருக்கும் பட்சத்தில் அவ் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(v) **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பம், அவர்களது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம், கையொப்பத்தை உறுதிப் படுத்துவதற்கு அதிகாரமுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது, சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்கப் பாடசாலை அதிபர், கடல், வான், தரைப் படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர், 6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூ. 22,935 அல்லது அதற்கு கூடிய மாதாந்த சம்பளம் பெறும் நிரந்தர அரச உத்தியோகத்தர், பௌத்த விகாரை பிரதம குரு, நாயக்க தேரர், ஏனைய மதவழிப்பாட்டுத் தளங்களின் மதத் தலைவர்கள் ஆகியோர்களில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*12.* **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் சார்பில் அந்தந்த பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அவ் அனுமதி அட்டையை பரீட்சை நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகள் அவர்களுக்கு விதிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமக்குரிய பரீட்சை மண்டபம் தவிர்ந்த வேறொரு பரீட்சை மண்டபத்திற்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், தான் பரீட்சைக்குத் தோற்றும் தினத்திலேயே தமது பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை நிலைய அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இவ் வர்த்தமானி அறிவித்தலின் பகுதி I : தொகுதி (IIஅ) பந்தியில் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும், அறிவுறுத்தல்களும் பிரசுரிக்கப் பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ் அறிவுறுத்தல்களை கடைப்பிடிப் பதற்கு கடமைப்பட்டுள்ளனர். எவரேனும் பரீட்சார்த்தியொருவருக்கு குறைந்தது பரீட்சை நடைபெறும் திகதிக்கு 7 நாட்களுக்கு முன்னரேனும் தமக்கான பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பட்சத்தில்/ பரீட்சை அறிவித்தல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்பும் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பட்சத்தில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். ஏற்கனவே தங்கள் வசம் வைத்திருந்த விண்ணப்பத்தினதும், பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதிகளையும், பதிவுத் தபால் பற்றுச்சீட்டின் பிரதியையும், கொழும்பிற்கு வெளியிலாயின், அவர்களுக்குரிய பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தங்களது கோரிக்கைக் கடிதத்தினூடாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பொருத்தமானதாகும். பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். சட்ட திட்டங்கள் மீறப்படுமிடத்து, அவருக்கு பரீட்சார்த்திகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடும்.

13. **அடையாள அட்டை**.-பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும், பரீட்சை நிலைய அதிபர் திருப்திப்படும் வகையில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஒன்றை சமர்ப்பிக்கலாம் :-

(அ) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) இப்பரீட்சை நடைபெறும் திகதிக்கு 03 வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களுள் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இரத்துச் செய்யப்படலாம்.

14. **தகைமை தொடர்பான ஆவணங்கள்**.- (i) தமது விண்ணப்பத்துடன் பணம் வைப்பிலிட்ட பற்றுச்சீட்டு தவிர வேறு எந்தவித ஆவணங்களையும் அனுப்புதல் கூடாது. எனினும், பணிக்கப்பட்டவாறு, தேவையான அனைத்து விபரங்களையும் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தேவையான விபரங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் இருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கான தகுதியைப் பெறும் பரீட்சார்த்திகள், தமது தகைமையை, உரிய ஆவணங்களை சான்றாக சமர்ப்பித்து நிரூபித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதியை சமர்ப்பிப்பது கட்டாயமாகும் :-

(அ) தமது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் பொறுப்பு வாய்ந்த நபரொருவரின் கையொப்பத்துடன் வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரம் ;

இந்த நற்சான்றுப் பத்திரத்தை சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரிவிற்குரிய பிரதேச செயலாளர் அல்லது 6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூ. 22,935 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்தச் சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தர், பௌத்த விகாரையின் பிரதம குரு, நாயக்க தேரர், ஏனைய மத வழிபாட்டுத் தளமொன்றின் மதத் தலைவர் ஆகியோர்களுள் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நற்சான்றிதழை வழங்குபவரின் பெயர், பதவிப் பெயர், முகவரி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அரச சேவை நிரந்தர உத்தியோகத்தர்கள் நற்சான்றுப் பத்திரம் எதனையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு பதியப்படாத பரீட்சார்த்திகள் தொடர்பில்) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது தொடர்பாக வழங்கப்பட்ட விசேட சான்றிதழ்.

**குறிப்பு**.- பாடசாலைகளில் பயன்படுத்துவதற்காக அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக விநியோகிக்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவுக் குறிப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக சத்தியக் கடதாசியோ அல்லது பெயரீட்டுச் சான்றிதழ் (Baptismal Certificate) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/பெயர்களுக்கும், பரீட்சார்த்தி பொதுவாகப் பாவிக்கும், அதேநேரம் அவர் பரீட்சைக்குத் தோற்றும் பெயர்/பெயர்களுக்குமிடையில் வித்தியாசங்கள் இருப்பின், அதற்கேற்றவாறு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 அல்லது 28 கட்டளையின் பிரகாரம், தமது பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயரை/பெயர்களை மாற்றிக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் :-

(iv) இலங்கைப் பிரசையாக பதிவு செய்து கொண்ட சான்றுப் பத்திரம் அல்லது பரம்பரை வழியாக வந்த இலங்கைப் பிரசையென அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட கடிதம் (தேவையானவாறு).

(v) இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் கேட்கப்பட்டுள்ள (கல்வி தொழில்சார்) தகைமைகளைக் காட்டும் தகுதிச் சான்றிதழ்கள்.

(vi) செயன்முறைப் பயிற்சி பெற்றுக் கொண்ட மோட்டார் கராஜினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

(vii) சகலவித மோட்டார் கோச் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

(viii) இப்பதவிக்கு விண்ணப்பிக்கும்போதே, தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார் நிலையில் வைத்துக் காள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. கோரப்படும் போது தேவையான ஆவணங்களைச்

சமர்ப்பிக்கத் தவறும் அல்லது அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு தாமதமாகும் பரீட்சார்த்திகள் இப்பதவிக்கு நியமிக்க தகுதியுடையவராக ஆக மாட்டார்.

15. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியில்லை எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்பதாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது வேறு எச்சந்தர்ப்பத்திலேனும் அவரது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படக்கூடும். பரீட்சார்த்தியினால் தெரிந்து கொண்டே பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயமொன்று தெரிந்து கொண்டே மறைக்கப்பட்டுள்ளதாக தெரியவரும் பட்சத்தில், அவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராக இருந்திருக்கின்றார் என, அவரது சேவைக் காலத்தில் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அது, அவரை உடனடியாக சேவையிலிருந்து நீக்குவதற்கான காரணமாக அமையும். இவ் அறிவித்தல் மூலம் கேட்கப்பட்டுள்ள தேவைகள் உரியவாறு பூர்த்தி செய்யப்படாதிருக்கும் பட்சத்தில் அவர்களின் அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும்.

16. இவ் ஒழுங்குவிதிகள் மூலம் விபரிக்கப்படாத வேறேதேனும் விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் விருப்பிற்கேற்ப முடிவெடுக்கப்படும்.

பி. விஜயரட்ன,
மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டா வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.
2009.03.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II பிரிவு 'ஆ' வைச் சேர்ந்த மோட்டார் வாகன பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய் வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008 (2009)**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT OF MOTOR VEHICLE EXAMINERS TO CLASS II SEGMENT B OF THE SRI LANKA TECHNOLOGICAL SERVICE FOR THE DEPARTMENT OF MOTOR TRAFFIC- 2008 (2009)**

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

01. பிரத்தியேக தகவல்கள் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) உ+ம்: SILVA A.B.

1.2 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.4 நிரந்தர முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய) (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
.............................................................................

1.5 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

1.6 பால் : (ஆண் - 0, பெண் - 01) - [ ]
உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.

1.7 விவாகமானவரா? /விவாகமாகாதவரா?
(விவாகமானவர் - 01, விவாகமாகாதவர் - 2) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்).

1.8 தேசிய அடையாள அட்டை இல. : [ | | | | | | | | | ]

1.9 பிறந்த திகதி :-
ஆண்டு: [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

1.10 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள் : [ | ]

1.11 நீங்கள் இலங்கைப் பிரசையா (பொருந்தாத சொற்களை வெட்டி விடவும்):-

(அ) ஆம்/இல்லை :-----.

(ஆ) பரம்பரை மூலம் /பதிவின் மூலம் :-----.

02. **கல்வித் தகைமைகள் :**

(i) க. பொ. த. (சா. த.)/தே. க. பொ. சா. பரீட்சை:

வருடம் : .................. பரீட்சைச் சுட்டெண் : ..................

| சித்தியெய்திய பாடங்கள் | தரம் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை:

வருடம் : ................. பரீட்சைச் சுட்டெண் : ................

| சித்தியெய்திய பாடங்கள் | தரம் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

(iii) பல்கலைக்கழகப் பட்டங்கள் அல்லது வேறு உயர் கல்வித் தகைமைகளைக் கொண்டிருப்பின் அவை தொடர்பான விபரங்கள் :

| பட்டத்தின் பெயர் | பின்பற்றிய பாடங்கள் | சித்தியெய்திய வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|
| ........... | ............... | ................. | .................. |
| ........... | ............... | ................. | .................. |

03. தொழில்சார் தகைமைகள் :

| பாட நெறியின் பெயர் | நிறுவனம் | கால எல்லை (வருடங்கள்) | சித்தியெய்திய வருடம் |
|---|---|---|---|
| .............. | ................ | .................. | .................. |
| .............. | ................ | .................. | .................. |

(ii) (அ) பயிற்சி பெற்ற மோட்டார் கராஜின் பெயரும் முகவரியும் : -----.

(ஆ) அந்த கராஜின் பதிவு இலக்கம் : -----.

(இ) பயிற்சி பெற்ற காலம் : ------- இலிருந்து ------- வரை ------ வருடங்கள்

(iii) (அ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் இல. : -----.

(ஆ) வழங்கப்பட்ட திகதி : -----.

04. அரச திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தராயின் -

திணைக்களத்தின் /கூட்டுத்தாபனத்தின் பெயர் : -----.
தற்போது வகிக்கும் பதவி : -----.
இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : -----.
முகவரி : -----.

05. ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?:- (ஆம்/ இல்லை ):-----. ஆமெனில், விபரங்களைத் தருக : -----.

06. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக ரூ. 350 செலுத்தி, மாவட்டச் செயலாளரிடமிருந்து/பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ........................ ஆந் திகதிய ....................... ஆம் இலக்க பற்றுச்சீட்டு பின்புறம் ஒட்டப்பட்டுள்ளது.

07. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், உறுதி செய்து பிரகடனம் செய்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களுள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என, நான் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாக தெரிய வருமாயின், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படுமென்பதையும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்பு இத்தகவல்கள் தெரியவருமிடத்து எனது நியமனம் உடனடியாக இரத்தாகும் என்பதையும் நான் நன்கு அறிவேன். மேலும், இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு நான் இணங்குகிறேன்.

........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

(விண்ணப்பதாரி அரச திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனமொன்றில்/உள்ளூராட்சி நிறுவனமொன்றில்/மாகாண சபையொன்றில் பணியாற்றும் உத்தியோகத்தரொருவராயின், தமது திணைக்களத் தலைவரூடாக அல்லது கூட்டுத்தாபனத் தலைவரூடாக அல்லது பிரதம செயலாளரூடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

**திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ....................... அவர்கள் இத்திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில்/ உள்ளூராட்சி நிறுவனத்தில்/மாகாண சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரென்றும், அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், இப்பதவிக்கான வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு, இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளாரென்றும், இவர் இப் பதவிக்கு தெரிவாகும் பட்சத்தில் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாதெனவும் பிரகடனம் செய்கின்றேன்.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ முத்திரை)

பெயர் : -----.
பதவி : -----.
முகவரி : -----.
திகதி : -----.

3-524

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

B 2 – B 079994